BRAMPTON Flower City brampton.ca

fact sheet

**ப்ராம்ப்ட்டன் நகரின் குளிர்கால தட்பவெப்ப நிலைக்கான இயக்க செயல்கள்**

**பனி விழும்போது நகரில் நடப்பது இதுதான்:**

- ✓ **முதலில், களப்பணியாளர்கள் பிரதான சாலயில் உப்பு தூவி வழித்துவிடுகிறார்கள்.** இந்த பிரதான சாலைகள் என்பவை ப்ராம்ப்டன் போக்குவரத்து வசதி/ஜூம் வழித்தடத்தில் அமைந்திருக்கும் சாலைகளில் பெருமளவிலான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலைகளாகும்; இவற்றில்தான் பீல் பள்ளிகளும் அரசு பள்ளிகளும் அமைந்துள்ளன.

- ✓ **பிரதான சாலைகளைச் சீர் செய்த பின்னர், குடியிருப்புப் பகுதி சாலைகளில் இக்களப்பணியாளர்கள் உப்பு தூவி வழித்து விடுகிறார்கள்.** இவை உங்கள் வீட்டிற்கு அருகாமையில் இருப்பவையாகும். குடியிருப்புப் பகுதி தெருக்கள்:
  - ஒரு தடவையில் ஏற்பட்ட பனிப்பொழிவில் குறைந்தது 7.5 செமீ (3 அங்குலம்) ஆழத்திற்கு பனித்துகள் இருந்தால் மட்டுமே வழிக்கப்படும். அதாவது இது ஹாக்கி பந்து உருண்டையில் அளவு அல்லது கிரிக்கெட் பந்தைக் காட்டிலும் சற்று கூடுதல் கனம் கொண்டதாக இருக்கும்.
  - பிரதான சாலைகளில் செய்வது போல முற்றிலும் வழித்து சுத்தம் செய்வதில்லை. தெருவில் வழித்து விடப்பட்ட பின்னரும்கூட, சிறிது பனி சாலையில் மிச்சம் இருக்கத்தான் செய்யும்.

- ✓ பூங்காக்களில் கேளிக்கை தடங்களில் மற்றும் பக்கவாட்டு நடைபாதைகளிலும் இக்களப்பணியாளர்கள் உப்பு தூவி வழித்துவிடுவார்கள்:
  - பிரதான சாலையில்
  - ப்ராம்ப்டன் போக்குவரத்து வசதி /ஜூம் பேருந்து வழித்தடத்தில்
  - சிட்டி பார்க் முன்பாக அல்லது உங்கள் சொத்து இருக்கும் பகுதிக்கு பின்புறம் இருக்கும் வசதியமைப்பில்
  - நடைபாதை கல்பதித்த பகுதியில் (பக்கவாட்டு நடைபாதை மற்றும் சாலைக்கு இடையில் புற்கள் இல்லாத மரங்களடர்ந்த பகுதி)

இதர பிற பக்கவாட்டுச்சாலைகள், சொத்துக்கு உடைமையாளரின் பொறுப்பாகும்

பனிப்பொழிவு முடிந்துவிட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக அனைத்து சாலைகள், பக்கவாட்டு நடைபாதைகள், ஒற்றையடிப்பாதைகள் அனைத்தையும் சீர் செய்துவிடுவதே களப்பணியாளர்களின் குறிக்கோளாகும்.

வசிப்பிட வாசியாக இருக்கும் தாங்கள் இப்படியொரு வித்தியாசமான சேவை செய்யலாம்:

- ✓ பனிப்பொழிவு முடிந்த நாளின் காலை 11 மணி வாக்கில் உங்கள் வீட்டிற்கு முன்புறமும் பக்கவாட்டிலும் இருக்கும் நடைபாதையை சீர்படுத்தலாம்.
- ✓ உங்கள் கட்டிடத்தில் இருந்து பனியை வாரி எடுத்து சாலையிலோ அல்லது பக்கவாட்டு நடைபாதையிலோ கொட்ட வேண்டாம்.
- ✓ கழிவுகளை சேகரிக்கும் நாளில், உங்கள் வாகனம் செல்லும் பாதையின் அல்லது கல்பதித்த இடத்தின் மரங்களடர்ந்த இடத்தின் கடைசியில் உங்களுக்கான கழிவு வண்டிகள் நிறுத்துவதற்கான ஒரு இடம் ஒதுக்கித்தாருங்கள். பக்கவாட்டு நடைபாதையிலோ அல்லது சாலையிலோ நிறுத்தி வைக்க வேண்டாம்.
- ✓ பனிப்பொழிவின்போது, உப்பு தூவி வழித்து முடிக்கும் வரை வாகனம் எதையும் சாலையில் நிறுத்தி வைக்க வேண்டாம். தெருக்களில் வாகனத்தை நிறுத்தி வைத்தால், களப்பணியாளர்கள் சரிவர சாலையைப் பராமரிப்பு செய்ய முடியாது.

**தொடர்பில் இருங்கள்!**

- ✓ குளிர்காலம் சம்பந்தமான தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/snow இதில் பனி அகற்றுவதற்கான புது தகவல்கள் 24/7 என்ற அடிப்படையில் அடங்கும்.
- ✓ ட்விட்டரில் @CityBrampton இல் பின் தொடரவும் ஃபேஸ்புக்கில் City of Brampton ஐ லைக் செய்யவும்